உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

திருமயிலைக்

குழைந்தயாநந்ததேசிகர்

அருளிச்செய்த

# அர்த்தநாரீசுரமாலை.

இஃது

பாடங்கள்தோறும்

சீர்கள் - குறைந்தும் மிகுந்துமிருந்ததை

திருச்செங்கோடுதாலுகா

படிமேஸ்திரி

## முத்துசாமிக்கோனு

—(○)※(○)—

ரவர்களால்

பலபிரதிரூபங்களைக்கொண்டாராய்ந்து

சுத்தபாடமாக்கி

ஷை யூர்,

க. காவேரிமுதலியாரவர்கள்குமாரர்

## அர்த்தநாரிமுதலியார்

கேட்டுக்கொண்டபடி

MADRAS.

**Printed By T. Sbabathy Pillay.**

**Mattoovar Colalumbal Press!**

**Chintadrepettah.**

**1882.**

உ

# சாற்றுக்கவி.

திருச்செங்கோட்டில்வசித்திருந்த

சிற்றம்பலநாவலர்

மாணாக்கராகிய

பழனிவேலுஉபாத்தியாயரவர்களியற்றிய

விருத்தம்.

ஆர்த்தனூரசுரமாலை யனைவருந்துதித்துவாழ்க்ச்
சுத்தபாடங்களாகத் தூயவர்மனங்களிப்ப
மூத்தமிழ்முத்துசாமி மூதறிவாளனுய்ந்தன்
இத்தலந்தன்னிலச்சிட்டிருநிதிச்செல்வம்பெற்றான்;

சிவமயம்.

திருக்கொடிமாடச்செங்குன்றூர்

என்னும்

திருச்செங்கோடு

# அர்த்தநாரீசுரமாலை.

காப்பு.

அப்பணிச்சடிலர் *கோதையின்மேவுமர்த்தநாரீசுரர்மாலை [ழ்வார்
செப்பிடப்பரிவாய்ப்புன்சொலைக் கலைஞர்தெளிந்ததோர்தமிழெனப்புக
முப்பழங்கடலையெட்பொரிநுகர்ந்துமும்மதம்பொழிந்து நின்றிலங்குங்
கற்பகத்திருவட்டவைங்கரனார்கமலபொற்பதமலர்துணையே.

திருவளர்மயிலைக்குழந்தையானந்த தேசிகசொரூபமாயிருந்து
பரவுகாயடியேன்சிரசினிலுனது பதமலர்வைக்கும்வாறுளதோ
உரவதாய்விளங்கும்புதல்வருந்தனமோதியவனைத்தையுங்கொடுக்கும்
அருமறைமுதல்வா *நாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (க

* கோதையூர்நாகமலை - என்பது - திருச்செங்கோடு.

பாதிமாமதியுங்கரியமாமிடறும்பரிந்தணிபரவபந்தனமும்
வாதுசெய்பாதகமலமுமன்றி மற்றொருதெய்வமுமறியேன்
மேதினிதுதிக்கவினைகளைத்தவிர்த்தவிமலவுன்மெய்ப்பதமருள்வாய்
ஆதியேயகண்டநாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௨)

வஞ்சகமடவார்மையலிலுருகி மயங்கிபான்வீழ்ந்துழலாமல்
நெஞ்சகமதனிலைந்தெழுத்தனை நினைந்துநைந்துருகுநாளுளதோ
பஞ்சின்மெல்லடியாள்பனைக்கொருபாகாபதமலரெமக்கருள்புரிவாய்
யஞ்சலென்றருளுநாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௩)

நவமணித்தூணிலுதித்ததோர்மடங்கல் நடுங்கிடப்புள்ளதாயெழுந்து
அவமதைப்படக்கிநற்பதமளித்த வடியிணைமறப்பனோவடியேன்
றவமுனிவோருமறையவருலகோர்தனித்தனிவணங்கிடவர்க
ளவலமதகற்றுநாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௪)

முண்டகஞ்சகஸ்த்திரவெண்ணிலொன்றிலதான்முன்னுறவலக்கணர்ச்ச
னைசெய்,கொண்டல்வண்ணனுக்குநேமியைக்கொடுத்தகொள்கையைம
றப்பனோவடியேன்,றெண்டிரைசூழும்காவலன்றீவிற்றெட்சணகைலையெ
ன்றிலங்கி,அண்டர்கள்புகழும்நாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௫)

தத்தைமென்மொழிக்குத்தன்மொழி பயிற்றுந்தனம்புடைத்தெழுந்தம
ங்கையர்பால், சித்தம்வைத்துழலுஞ்சிறுமையன்மங்குஞ்சிறுமனக்கு
மனக்கொடேனடியேன், பித்தனேபிறையைச்சூடியநாதாபேருலகனைத்
தையும்பயன்ற, வத்தனேயமலாநாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. ( )

மாதவன்விரிஞ்சனிகல்தவிர்த்திடவேவன்னியாய்த்தோன்றிநின்றிடவும்
பூதலமதனிலடிமுடிகாணார்பொன்னடிக்கமலமேயருள்வாய்
சோதியேசுடரேசுடர்மணித்தீபச்சொரூபனேயமரர்கள்போற்றும்
ஆதியேயமுதேநாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௭)

சீருலகதனிற்பிறந்திறந்துழன்றுசிறுமைசெய்துனதுசீர்க்கருணை
வாரிதிக்கடலின்மூழ்கிலென்பிறவிமாறுமோதெரிந்திலேனடியேன்
பாருலகறியவுனதுமெய்ஞ்ஞானப்பதமலரெமக்கருள்புரிவாய்
ஆரணிச்சடையாயநாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௮)

சுழித்திடுங்கங்கைவார்புனற்சடையிற்சூடியுங்கரியதணகத்தாம்
கிழித்தணிந்தவனேநினதுபொற்கழலைக்கிட்டவேயெமக்கருள்புரிவாய்
செழித்திடுமயன்மான்முனிவர்கடேவர்செய்திடும்வல்வினைபலவும்
அழித்தவைம்முகனேநாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௯)

சூதுசெய்மடவார்விரகவாரிதியிற்சுழன்றுவீழாமலேதமியேன்
காதலாகத்தூக்கியபாதங்கண்டுகண்களிக்கவேயருள்வாய்
மேதிவாகனஞ்சேர்சமன்றனையுதைத்தவிமலனே விண்டலர்வணங்கும்
ஆதிசங்கரனேநாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௰)

பற்பலோசனமாலரியுருவாகிப் பாரகழ்ந்தகமிகவருந்திக்
கற்பகாலங்கள்தேடியுங்காணாக் கழல்தனையழுத்தவேயருள்வாய்
முற்பவமென்னும்வாரிதியதனின்மூழ்கியேயுநித்துசித்தபரும்
அற்பவாழ்வகற்றும் நாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௧௧)

பெருந்தவத்துடையோர்கண்டு கண்களிப்பப்பேயுடன்கூடலையிலாடுந்
திருநடமெய்ஞ்ஞானக்கழறனை யடியேன் சிந்தைவைத்துருகும்நாளுள
தோ, குருந்தடியிருந்தேவனேயெனதுகொடியவெம்பவமெலாமகற்று
ம், அரும்பெருங்கடலேநாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௧௨)

கரும்புகர்முகமேமுதலெழப்பிறக் கருதுமெவ்வுயிர்க்குயிராக
விரும்புமெய்ஞ்ஞானச்சுடரொளி தன்னைவினவியான் வழுத்தவேயரு
ள்வாய், கரும்புவெஞ்சிலையோன்பொடிபடவிழித்தகண்ணனேவானவர்
க்கரசன், அரும்பகைதடிந்தநாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௧௩)

தையல்தன்வலியாலிருவிழிமருட்டாற்றடுத்தனைத்தனதினன்மயங்கி
மையல்வாரிதியில்வீழ்ந்துழலாமன்மலர்ப்பதந்துதிக்கவேயருள்வாய்
செய்யபொற்கமலந்தன்னில்வீற்றிருக்குந் திசைமுகன்சிரசுவெண்டோ
ட்டி, லையுமேற்பவனே நாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௧௪)

கதிரவன்புதல்வனிருவர்வந்தெதுக்கக்காலினலொருவனைக்கடிந்து
சதிருடனொருவன்கால்தனையொடித்ததன்மைப்பச்சிறுவனேவலிலவன்
ந்திபுனைசடையாகிர்த்தகங்காளநாதனேநாவிழவைக்கும
அதிகமாய்நின்றநாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௧௫)

பணிதலையணிந்துளலும்புமேபூண்டுபாததாமரைதனைத்தாகசி
துணிந்துநின்றுடும்வன்மைமைபக்கண்டுதோத்திரஞ்செயுநாளுளதோ
மணிவடத்தளத்திமங்கைபங்காளா மதமிகுகரியதளதனை
யணிந்திடுமாதிநாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௧௬)

காத்திலிநெம்பிக்கண்ணினினைகயிற்களறனையேற்றதுசுரங்கச்
சிரத்தினிற்கங்கைபைம்புலிசேர்த்தசெம்மலானறிவனேசிறியேன்
உரத்திடுதேரின்மரகதவாசியூர்ந்திடுவோனமுதலவர்கள்
ஆற்றிடக்காத்தநாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே, (௧௭)

சீலத்தைமயக்குஞ்சுரிகுழன்மாதர்வலையில்வீழாமலேயுனது
கோலத்தைநெண்ணிநாவினிற்றுதித்துக்குரைகழல்வணங்கவேயருள்
வாய், பாலுற்றகடலைக்கடைந்திடவமுதுபாலிக்குமுன்னெழுங்கொடிய
ஆலத்தையடக்கும்நாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (கஅ).

இளம்பிடியுடனேவிடையினில்வயங்கியிறைவனேவிபுதர்கள்சூழ
வளமிகுமறையைவியாசனுக்களித்தவண்மையைமறப்பனோவடியேன்
துளவணிமுடியோன்சதுமுகன்கரணக்கோன்றலைசெக்கர்வானிறத்த
அளவிலாமுதலேநாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (க௯)

தவத்தினுக்கெளியசமயசங்கரனேதாணுவேவதிர்த்தகங்காளா
சிவசிவநமசிவாயனேயென்றுசிந்தைதனைந்துநகுநாளுளதோ
கவுரிதன்பாகங்கலந்தகண்ணுதலேகமலநான்முகனையும்படைத்து
அவனியில்விளங்கும்நாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (உ௰)

பூசியைப்பணிந்துன்பதமலர்தன்னைப்போற்றுவார்தம்மையேபோற்றி
சோதியையறிந்துதொழுதுநெஞ்சுருகித் தொண்டுசெய்திருக்குநாளுள
தோ, கோதமன்பணியுங்கெளரிதன்பங்காகுரைகழலெமக்கருள்புரிவா
ய், ஆதியாய்விளங்கும்நாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (உக)

மாதளமலர்போனிறத்தினையுடையவஞ்சியர்வலையில்வீழாமற்
சீதளமிருந்தபாதத்தாமரையைத்துதித்தகமகிழ்ந்திடவருள்வாய்
வேதகவிருப்பைத்தங்கமாக்குவர்போல்விமலனேயடியவர்க்காக
வாகரனருளும்நாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (உஉ)

சதைபெறுசரமுமதன்படவிழியுங்கடிவிடமடக்கியமிடறுஞ்
சிதைவிலாக்கழலுமென்னுளத்திருத்திச்சிந்தைதனைந்துநகுநாளுளதோ
மதம்பொழிதந்திமுருகனையளித்தவள்ளலேமுச்சுடர்தனக்கும்
அதிகவெண்சுடரோநாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (உ௩)

உருவெனவிளங்கிப்பிறவிசாகரத்திலுழன்றிடுங்கொடியனைமயக்குங்
கருவியையடக்கிநினதுதாமரைக்கீழ்க்களித்துவீற்றிருக்கவேயருள்வாய்
மருவிடுதவத்தோர்கண்டுகண்களிக்குமகேசுரமாதவர்தமக்கு
அருட்டனைக்கொடுக்கும்நாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (உ௪)

மாத்திரைநேரங்கருணையேசெய்தால்மண்ணின்மீதுயிர்விளங்கிடுமீ
மாத்திரமுனிர்தானரகுறுமுனது மகிமையையுலகில்யாரறிவார்
கூத்தினையுகந்துநித்தனேவுமையாள் கொழுநனேசடையினிலறுகோ
டாத்திகுடியனேநாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (உரு)

அப்பெனுமிதழினபானத்தையளிக்குந் தோகையர்கலவியின்மனதை
ஈவப்பதைத்தவிர்த்துநின்னடிக்கமலமலர்நிழனிற்கவேயருள்வாய்
தப்பிலாத்தவத்தோர்கண்டுகண்களிக்குந்தாணுவேமுடிமிசையிலவோ
டப்பணிந்தவனேநாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (உசு)

வரிபரந்திடுவேல்விழியினையுடையமாதர்கள்மாய்கையின்மயங்கித்
தெருளிலாதயர்வோர்பிழைதனைப் பொறுத்துன்றிருவடிக்கமலமேயரு
ள்வாய், குருகுலப்பார்த்தன்றேர்தனைக்கடவிக்கொடியவஞ்சகரையுமழித்
து, வரிபணிபாதாநாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௨௭)

படைதனைக்கேற்றவிடையினைநீயும்பரிமளவல்லியோடெழுந்து
புடவியிற்பவனிவரும்பெரும்பவுசைப்புகழ்ந்துநின்றேத்துநாளுண்டோ
சுடலையிற்றிரிந்துஎலுப்புமேபூண்டுதூயவர்பிறப்பினையொழித்து
அடிமைகள்படைத்தநாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௨௮)

மகிதலம்புகழச்சுரர்புடைசூழமகிழ்வுடன்விடைமிசையெழுந்து
பகிரதன்றனக்குக்கொடுத்தருள்வரத்தைப் பகர்ந்திடச்சிறுவனுற்றகு
மோ தகைகொணற்றவத்தோர்கண்கண்களிக்குஞ்சரணனே அண்ட
பிண்டங்க,ளகிலமுங்காக்குநாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௨௯)

மண்ணினிலடியேன்பிடியினுலெமன்றன்வலியினுன்மெலிந்துழலாம
லுன்னடிக்கமலநிழலில்வீற்றிருப்போருடன்கலந்திருக்கவேயருள்வாய்
கன்னல்விற்பிடித்தோனெரிந்திடவிழித்தகண்ணனேமுனிவர்மாதவர்க்
கும், அண்ணலாய்விளங்குநாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௩௦)

மட்டுவார்குழல்சேர்மங்கையோர்புரமும்வலியத்தண்டேந்தியகாரூங்
கட்டுசெஞ்சடையும்வெண்ணிலாவழகுங்கனவிலும்நினைவிலுமறவேன்
றுட்டனியான்செய்தபாதகமகற்றிச்சுத்தநின்பதமலரருள்வாய்
அட்டமாகுணஞ்சேர்நாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௩௧)

ஓதிமந்தனக்குநடைதருமடவாருறவுசெய்துருகியேகலங்கிச்
சாதனைத்தொழிலில்விழாவகைபுரிந்துதமியனுக்கருள்புரிந்திடுவாய்
மேதினிபுகழ்ச்சிற்சபையதனின்வியாக்கிரமர்களித்திடநடிக்கு
மாதிநாயகனேநாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௩௨)

சேரனல்குமாரனையனலாய்ச்செய்ததோர்விழியினையுடைய
நாதனின்பெருமையுலகிலாரறிவார்நவின்றிடநன்மையேதருவாய்
கோதையிற்றவஞ்செய்கௌரிமணாளா குன்றைவில்வளைத்திடுங்கோவே
ஆதவன்வலஞ்செய்நாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௩௩)

அச்சமினமனையுதைத்தருள்பதமுமழகியதண்டணிகரமுங்
கச்சணிமுலையாளொருபுறத்தழகுங்கனவிலுநனவிலுமறவேன்
பக்ஷம்வைத்தெனதுபவக்கடற்றொலைத்துன்பதமலரெமக்கருள்புரிவாய்
அச்சுதன்பணியுநாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௩௪)

தக்கனூர்புரிந்தவேள்விபைத்தவிர்த்துந்தலைவிழச்சாடியேபின்பு
பக்குவமாகத்தகர்த்தலைபுரிந்தபண்பினைமறப்பனோவடியேன்
திக்கெலாம்விளங்குநாதனேஅடியார்தீவினையகற்றிடும்வெள்ளை
யக்குமாலிகையாய்நாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௩௫)

மாதராற்பொருளான்மண்ணினால்வாடிமயங்கியான்வீழ்ந்துழலாமற்
பாதபொற்கமலந்தன்னையேதுதித்துப்பணிவிடைசெய்யுநாளுளதோ
சீதளவதனமாதுமைபங்கா தேவனேநான்முகன்றேட
வாதியாய்நின்றநாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௩௬)

விடைதனில்விளங்கிப்பூவையும்நீயும்விரிஞ்சன்விண்ணவரெலாஞ்சூழ
ப்படியிசைவாணன்றவத்தினுக்களித்தபண் பினைமறப்பனோவடியேன்
கடகரிமுகனைக்கந்தனையெடுத்துக்கட்டிமுத்தாடிடும்விமலா
அடியவர்க்கெளியாய்நாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௩௭)

வதனதாமரையாய்ச்செஞ்சடைமீதின்மதிகொழித்திடுநதிசூடும்
பதமலரதனைவினவியான்வருந்திப்பரிந்துபூசிக்குநாளுளதோ
சமயசன்புரிந்ததவத்தினுக்குதவிச்சரணமென்றடைந்தவர்பவத்தை
யிதமெனத்தொலைக்குநாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௩௮)

பவவினையதனின்மெலிந்தியானுழன்றுபரதவிக்காமலேயுனது
சிவகதிதன்னைச்சந்ததம்விரும்பிச்சிந்தைநைந்துருகுநாளுளதோ
குவடினுக்கதிபன்சிறுமியைமணந்த கொற்றவாவடியவர்செய்த
அவமெலாமகற்றும்நாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௩௯)

தரியலர்புரத்தைநகைத்தவனென்றுந்தவத்தவர்க்கெளியவனென்றுங்
கரிதளதனையுரித்தவனென்றுங்கனவிலுநினையுணவருள்வாய்
விரிசினங்கதுவவிரணியன்றன்னைவிண்டுவும்பிளந்துடனூர்த்த
வரிமதபடக்குநாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௪௰)

சேதவம்போருகச்செழுமுகத்துத்தெரிவையர்மையலாங்கொடிய
பாதகவலையில்வீழ்ந்துழலாமற்பரிந்துனைத்துதிக்கவேயருள்வாய்
கோதையின்மேவுங்குமரனையீன்றகுவிமுலைமாதுமணாளா
ஆதவச்சுடரோநாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௪௧)

கடும்புலியரித்துஆனையினிற்சாத்திக்கச்சையாய்நச்சரவணிந்து
விடமறிமழுவுங்கரத்தினிற்பிடித்த மேன்மையையுலகிலாரறிவார்
படுகுழியதனில்விழாவகைவிலக்கிப்பதமலரெமக்கருள்புரிந்து
அடிமைசெய்தாளும்நாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௪௨)

ஓதுபாற்கடலிலுதித்திடுவிடத்தையுகந்துநீகளத்தினிலடக்கி
நீதியாயமரர்முனிவரைக்காத்த நிலைமையையறிவனோசிறியேன்
போதகமுகத்தோன்குமரனைப்பயன்ற புனிதவெள்குணத்தினையுடைய்
வர்திவெண்ணிறத்தாய்நாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௪௩)

நதிதனைச்சூடுஞ்செஞ்சடைமுடிசேர்நாதனேநுதல்விழிபதனுன்
மதனெழிலுடலம்பொடிபடக்காய்ந்தவண்மையைத்துதிக்கவேயருள்வா
ய், சதிருடன்முனிவர்தேவர்காந்தருவர்தனித்தனிவணங்கிநின்றேத்த
அதிகமாய்நிற்கும்நாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௪௪)

கச்சினுக்கடங்காத்தனத்தினையுடைய கன்னியர்வலையில்விழாம
லிச்சையின்படியேயுனதுதாள்வழுத்தி யேழையேன்வாழுநாளுளதோ
கச்சரவணியுமண்ணலேயென்று நாடொறும்புகன்றிடவடியா
ரச்சமேயகற்றும்நாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௪௫)

கருத்துடன்கரியவேடனுமெச்சிற் கனிந்துநீநுகர்ந்துமவ்வேடன்
செருப்படிபுகந்துமவர்க்கருள்புரிந்த செயலைநான்மறப்பனோ சிறியேன்
பருப்பதன்பெற்றகௌவுரிதன்பாகாபைந் தமிழ்தனக்குவந்துதவி
அரும்புகழ்கொடுக்கும்நாகமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௪௬)

திருச்சிறுத்தொண்டன்செய்தசை நுகர்ந்துசெழிப்புடன்மறுபடிமகவை
க், கருத்துடனெழுப்பித்தொண்டனுக்கீய்ந்தக்கருணையையுலகில்யாறறி
வார், முருக்கிதழுமையாளினையிடம்வைத்த முக்கணுவம்புலியுடனே
அருக்கனும்வலஞ்செய்நாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே (௪௭)

அம்பரத்தவருங்கணுதிகள்சூழ அம்மையுநீயுமாயிருந்து ன்
கும்பமாமுனிக்குத்திருமணங்காட்டுங் கொள்கையைமறப்பனோசிறியே
சம்புசங்கரனேசதாசிவப்பொருளே தாணுவேயகிலமும்படைத்த
வம்பலத்தரசேநாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௪௮)

கொடுமைகள்படைத்தமாதர்கள்வலையிற் குதலையான்வீழ்ந் தழுந்தாமற்
பொடிபுனைநீற்றுக்கோலமெய்யழகைப் போற்றிநின்றேத்துநாளுளதோ
முடிமிசைக்கங்கைதும்பையம்புலிசேர் முக்தனேபத்தர்கடன்னை
யடிமைசெய்சிவனேநாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௪௯)

புண்ணியஞ்செய்ததொண்டர்கள்பலரும் புகழ்ந்திடவறுபத்துமூவர்
பண்ணியபலனுலவர்க்கருள்புரிந்த பரிவினைத்துதிக்குநாளுளதோ
எண்ணியவெண்ணந்தனையெலாமறிந்து மெவ்வுயிர்க்குயிரதாய்நி
அண்ணன்மாதேவாநாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே.

பவத்தொழில்விடுத்துன்பாததாமரையைப் பணிந்தவர்தம்மையேபணி
ந்து,உவத்தலுற்றுனதைந்தெழுத்தினைமனதிலுச்சரித்திருக்கவேயருள்
வாய், சிவத்ததுப்பதரவுமையிடங்கொண்ட தேவனேயடியவர்க்குற்ற
வவத்தைகளகற்றும்நாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௫௧)

மலையினும்வலியபுயத்தினையுடைய மயிடனைக்கடிந்தகன்னிகைபாற்
றலைவில்வெம்பவம்வந்தணுகநின்னருளாற்றுறந்ததைச்சிறுவனேவறி
வேன்,கொலைசெயும்வேளைவிழித்தெரித்தவனே குளிர்மதிப்பிறைச்ச
டையதனி,லைமதிருடும்நாகமாமலைவா ழர்த்தனாரீசுரபரனே. (௫௨)

மஞ்சுசேரளகபாரத்தையுடைய மாதர்கள்மயகினிலாழ்ந்து
கெஞ்சியான்மெலிந்துதிரிந்துழலாமற் சேடிலாநின்பதமருள்வாய்
தஞ்சமென்றுனதுகுஞ்சிதமலர்த்தா டனைநினைந்துருகுழுள்ளன்பர்க்
கஞ்சலென்றருள்செய்நாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே.

கொப்பிடுஞ்செவிசேருமைதிருத்தலைவா குன்றைவில்வளைத்ததோர்மகி
மை,செப்புதற்கெளிதோவுன்கடாட்சத்தைச்சிறுவனேகண்டுகளிப்
பேன்,கப்பறையேந்திச்சுடலையிலாடிக் கண்டவர்பித்தனென்றுரைக்க
அப்பணிச்சடையோய்நாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே (௫௪)

தந்தைதன்பதத்தைத்தநயனும் வெட்டித்தாள்விலாநின்பதந்தன்னை
சிந்தைசெய்தண்டீசுரன்றனக்களித்த செயலைநானறிந்திடவலனே
சுந்தரியுடனேதில்லையினடஞ்செய் சோதியேஆதவனுதவு
மந்தகன்காலாநாகமாமலைவா ழர்த்தனாரீசுரபரனே. (௫௫)

பால்விடைமீதேற்பரையுடனெழுந்து பகர்திருநீலகண்டர்க்குச்
சேல்வளர்வாவிதனிலருள்வரத்தைச் செப்பிடச்சிறுவனாற்றகுமோ
வேல்வலக்கரங்கொண்டசுரரைத்தொலைத்தவேள்தனையன்புடன்பயன்ற
ஆல்வயற்றுமைசேர்நாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௫௬)

முத்தியேபெற்றவுன்றிருவடியார் முளரியந்தாளினிலெனது
சித்தம்வைத்தேத்திப்பணியவர்க்கியற்றிச் செழிப்புடனிருக்கவேயருள்
வாய்,பத்தர்கள்செய்தபவந்தனைத்தொலைத்துப் பரகதிகொடுத்திடும்பழு
ட்டும், அத்தனேயமலாநாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௫௭)

பாலினுமினியசொற்களைப்பயிற்றும் பைந்தொடிமையலிலுருகிக்
[illegible]கோலவாரிதியில்வீழ்ந்தழுந்தாமற் குறைகழல்வழுத்தவேயருள்வாய்
[illegible]மாமுனிவர்கண்டுகேண்களிக்குந் தேவனேபாற்கடலுதித்த
[illegible]ட்கொண்டநாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௫௮)

மதம்படுமனத்தினின்னைவைத்துருகி மலரடிதன்னைநின்றேத்தி
பதகமலத்திற்சேர்ந்துவீற்றிருக்கும் பரிசெனக்கருளுநாளுளதோ
சுதைமதிவதனத்தோகைதன்பங்கா சூரவன்கதிர்களுக்கெல்லா
மதிகமாய்விளங்குநாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௫௯)

நாரிதன்கலவிக்கடறனிலழுந்தி நலம்பெறும்நாரிதன்னுடனே
பாரினிற்பொருந்திவாழினுமுனது பதமலரெமக்கருளபுரிவாய்
சீரறுபுலித்தோலரைக்கிசைத்தவனே செழித்தகூவிளமறுகிதழி
யாரணிமுடியாய்நாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே (௬௰)

மல்லிகைமலர்கொண்டருச்சனைபுரிந்து மாதவம்புரிந்துநின்றேத்திச்
சொல்லினுக்கடங்காப்பேரொளிகண்டு தோத்திரஞ்செய்யுநாளுளதோ
புல்லினுஞ்சிறியவடியனையாளும் புங்கவாபத்தர்கள்செய்யும்
அல்லலைத்தவிர்க்குநாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௬௧)

வடுவிலாப்பூவும்புற்றளிகொண்டு மலர்ப்பதத்தர்ச்சனைபுரிந்து
செடிகொளாமனத்தோருடன்கலந்திருந்து சிந்தைநைந்துருகுநாளுள
தோ, கடுவிடமுண்டகண்டனேபரையாள்காந்தனேகமலபொற்பதத்தை
யடியவர்க்குதவுநாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௬௨)

சுருதியைச்*சுமதி+திடமதிக்களிக்கச் சுமதியுமெண்ணிலாப்பிறப் பாய்
கருதிபவதனைத்தவிர்த்துநீசெய்த கடாட்சத்தைத்துதிக்கவேயருள்வாய்
நிருதிதன்முதலாப்பாலகர்வழுத்தும் நிமலனேஉம்பருக்கரச
னரும்பகைதடிந்தநாகமாமலைவா ழர்த்தனாரீசுரபரனே. (௬௩)

சித்திரவிழியார்மீதுறுகாமத் தீயினிலுருகிவாடாமற்
சுத்தமாமுனதுபாததாமரையைத் தோத்திரஞ்செய்யுநாளுளதோ
புத்திசற்றில்லாக்கொடியவெஞ்சமணர் புரிந்தவேள்வியில்வெளிப்பட்ட
அத்தியைக்கொன்றநாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௬௪)

கரியவன்வலியில்‡மனோசயன்கலங்கிக் காசினிதனையெலாமிழக்கப்
பரிவுடனவற்குப்பவுசெலாமளித்த புண்ணியனைமறப்பனோவடியேன்
திரிபுரமதனைசசிரித்தெரித்திட்ட தீரனேயடியவர்தனக்கு
அரியதுபுரியுநாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௬௫)

தந்திடும்பிறவிமடையராய்த்திரிந்து தரணியின்மெலிந்துழலாமற்
சொந்தமேயென்றுன்சேவடிநிழலிற் றிரண்டறவிருந்துவாழ்ந்திடவே
ணை, கந்தனையளித்தகௌரிதன்பங்காகரியுரியக்குநீறணிந்த
அந்திமாவணஞ்சேர்நாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௬௬)

---

* சுமதி: பிராமணன் + திடமதி, சூத்திரன்

‡ மனோசயன் - உஜ்ஜினிராத்தரசன்,

மாருதமெனவேகட்டுந்திடும்விடைமேல் வனிதையும்நீயுமாயெழுந்து
சேரிச்சந்த்ரன்றலைக்குமேகொடுத்த செயலையிவ்வுலகில்யாரறிவார்
வாரணிதனத்துமங்கைபங்காளா மலரவனச்சுதற்கரிய
ஆரணமுடிவேநாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௬௭)

தும்பிதன்னிறம்போற்கூந்தலையுடையதோகையர்தனத்தையேவிரும்பி
யிம்பர்ஞாலத்திலலைந்துழலாமலேழையேன்வாழுநாளுளதோ
செம்பொன்மால்வரைபோலம்பலத்தாடுந் தேவனேஉலகினையீன்ற
அம்பிகைகணவாநாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே, (௬௮)

தும்புருநாரதருமிசைபாடத்தோகையுநீயுமாய்விடைமே
லம்பரர்சூழவரும்பெரும்பவனிஅன்புடன்காணுநாளுளதோ
நம்பினவடியார்பிறப்பினையொழிக்கும் நக்கனேமண்ணினையுண்ட
அம்பினைத்தொடுத்தநாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௬௯)

பஞ்சபாதகத்தாற்கலிவலிமிடியாற்பறந்துழன்றயர்ந்திடுந்தமியேன்
நெஞ்சினிலுனதுபதமலரதனைநினைந்துநைந்துருகுநாளுளதோ
கொஞ்சியமொழியாளுமைதிருப்பாகா குன்றைவில்வளைத்திடுங்கர்த்தா
லஞ்சலென்றழைக்கும்நாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௭௰)

கூவிளையிதழுங்கரந்தையுமெருக்குங்கொன்றையுஞ்சடையினிற்சூடி
சேவினிலுகந்துவரும்பெரும்பவனிசிறுவன்யான்காணுநாளுளதோ
பூவில்வாழயனும்நாரணன்காணப் புராரியேயுலகினிலெவர்க்கு
மாவியாய்விளங்கும்நாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௭௧)

குங்குமக்கதம்பப்பொடிமலரணியுங் கோதையர்வலையில்வீழாமற்
செங்கமலத்தாடன்னையேவாழ்த்தித் தீதகன்றிருக்கவேயருள்வாய்
வெங்கயமதனையுரித்துடுத்தவனே வேல்விழியிரதியைத்தழுவு
மங்கசன்பணியும்நாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௭௨)

பன்னிருபுயனும்முருகன்மடியப்பரந்திடுமாய்கையின்றொடர
வுன்னருடன்னாற்சேய்துயரகன்றவுறுதியைச்சிறுவனேயறிவேன்
கன்னிதன்றலைவாமதனனைக்காய்ந்த கண்ணனேகடவுளர்தமக்கு
மன்னைபோன்றவனேநாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௭௩)

திடமதிதனக்குச்சமதியால்வினையுந் தீமையிற்பிறந்திறந்தழுந்த
நடமிடும்பதத்தாய்திடமதிக்களித்த நன்மையுமடைப்பனேயடியேன்
வடமிருந்தனத்துமங்கைபங்காளா மகிழடியார்செயும்பவத்தை
யடைவுடன்றொலைக்கும்நாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௭௪)

சரிதையிலிருந்துன்கழலிணைபணிந்து தாழ்விலாப்பவுசுபெற்றவனா
கருதியேயினைக்கசசேடனுக்கெளிதோகருணையைச் சிறுவனேமதிப்பே
ன், பரிதியுமதியும்வலம்வரசசெய்தபரமனேபங்கயறகரிய
லரிதெனநின்றநாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௭௫)

சந்தனம்புனுகுகளபமேயணியுந் தையல்தன்மருட்டினுன்மயங்கி
பந்தபாசத்தில்வீழ்ந்தழுந்தாமற் பதமலரொடக்கருள்புரிவாய்
விந்தையதாகத்தில்லையிலாடும் விமலனேபகலவனளித்த
அந்தகன்வணங்குநாகமாமலைவா ழர்த்தனாரீசுரபரனே, (௭௬)

சாலிதன்காந்தன்சபித்திடச்*செயந்தன் றரணியிலாக்கனாய்த்திரிய
நீலமெய்க்கடகாற்சாபத்தைத்தீர்த்த நிலைமையைச்சிறுவனேயறிவேன்
சூலகபாலந்தன்னையுமெடுத்துச் சுடலையிலாடிடும்பதத்தா
யாலமதுண்டநாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௭௭)

சகந்தனிற்பிறந்துன்னடிதொழுது சார்ந்திடுமன்பரைவணங்கிச்
சுகமெனவுனதுபாததாமரைக்குத் தொண்டனுயிருக்கவேயருள்வாய்
மகபதிதேவர்மறையவர்முனிவர் வணங்கிநின்றேத்திடப்புரிவா
யகமகிழ்பவனேநாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௭௮)

கனக்குழலுடையமாதர்கள்வலையிற் கசடன்யான்வீழ்ந்தழுந்தாமல்
நினைந்துமெய்யுருகிப்பாததாமரையை நித்தியந்துதிக்குநாளுளதோ
முனைந்தபார்த்தனுக்காய்வரமது புரிந்தமுக்கணனேகேசவன்பயந்த
அனங்கன்மெய்தகனநாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௭௯)

மதுரமென்மொழிசேர்கௌரியுநீயு மால்விடைமீதினிலெந்த
னெதிருறச்சிரமேலிருகரங்கூப்பி யிறைஞ்சிடவாய்க்குநாளுளதோ
கதிருபன்னிருவரொன்னிருகலையோன் கனலியாமுச்சுடர்தனக்கு
மதிகமாமொளிசேர்நாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே, (௮௰)

விளைந்திடும்பாவக்கடறனிலழுந்தி வினையினேன்மெலிந்துழலாமற்
குளிர்ந்தபொற்கமலப்பாததாமரையைக்குறித்துநைந்துருகுநாளுளதோ
தெளிந்தபேரறிஞராகத்தில்வீற்றிருக்குந் தேவனே அண்டமாமுகட்டை
அளந்திடவுயருநாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௮௧)

எத்தனைதந்தையெத்தனைதாயோ வெத்தனைபிறப்பதோவறியேன்
சுத்தநின்பாதகமலத்தைத்துதித்துத் தொண்டுசெய்திருக்கவேயருள்வா

---

* செயந்தன் = விசுவாவசுவென்னுங்கந்தர்வன்மகன்

ய், முத்தனேயடியார்தோத்திரஞ்செய்ய முதல்வனாயிருந்தருள்கொடுக்கு
மத்தனேயமலாநாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௮௨)

கருணைசேர்நீலவிழியுமைதனக்குக் கனிவுடனுடலிடமீய்ந்து
பெருமையாய்நின்றகோலத்தைக்காணப்பேதையின்வினைகளைந்திடுவாய்
மருதிடைதவழ்ந்துகஞ்சனைவதைத்த வலவன்செப்பவமலைதயகற்று
மரும்பெரும்பொருளேநாகமாமலைவாழர்த்தநாரீசுரபரனே. (௮௩)

பணிவடமணிந்தபரமவென்றிமையோர் பணிந்திடப்பணிவிடமருந்தித்
துணிவுடனும்பாததாமரையைத் தொண்டுசெய்திருக்கவேயருள்வாய்
மணிபுனையடியார்பிறப்பினைத்தொலைக்கு மகேசுராகடகரியுரியை
மணிதிருமலனேநாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௮௪)

துடியிடைமடவார்மாய்கையிற்சிக்கித் துவண்டியான்விழுந்தயராமற்
படிமிசைநடனபாததாமரையைப் பன்பதாய்வழுத்தவேயருள்வாய்
கடுவிடமுண்டகர்த்தனேபரையாள் கணவனேவிண்டலத்தவரை
அடிமைசெய்தாளும்நாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௮௫)

கொக்கிறகுடனேதும்பையுமறுகுங் கொன்றையுங்குளிர்மதிநதியுஞ்
சிக்கெனச்சடையிற்றரித்தபேரழகைச் சிறுவனேகண்டுகண்களிப்பேன்
நக்கனேநாரிக்கோர்புரமளித்த நாதனேவிரிஞ்சன்மால்வணங்கு
மக்குமாலினைகயோய்நாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௮௬)

கதிரவனுதிக்குமுன்னமேயெழுந்து கங்கைநீர்தன்னிலேமூழ்கி
அதிமனவன்பாற்பொடிபுனைந்துனது ஐந்தெழுத்தோதிடவருள்வாய்
விதகலையோட்டாலையமேற்றவனே மெய்யினில்விளங்கிடவரவை
யதிகபூடணங்கொள்நாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே, (௮௭)

கோபத்தைப்பழிக்குமிதழினையுடைய கோதையர்மையலிலாழ்ந்த
பாபத்தைநீக்கினினதுபொற்கழலைப் பணிந்துபூசிக்கும்நாளுளதோ
தீபத்தையொத்தமெய்ப்பரஞ்சுடரோ சிந்திக்குமடியவர்க்குற்ற
வாபத்தையகற்றும்நாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௮௮)

வித்தகாவுனையேபுகழ்ந்துநின்றேத்தி மெய்யுறக்கண்டுகண்களிப்ப
வொத்தனைஜனனந்தவம்புரிந்தனரோ விவர்பணியெமக்கருள்புரிவாய்
சுத்தமாமுனது ஆலயஞ்சூழ்ந்து சுருதியுந்தெண்டநிட்டிறைஞ்சும்
அத்திகள்வெருவும்நாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௮௯)

தென்னவனரிலுதிர்ந்தபிட்டுக்காய்ச் சிரசினின்மண்ணினைச்சுமந்து
மன்னவன்கையாற்பிரம்படிபட்ட வண்மையைச்சிறுவனறிவேன்
முன்னமுப்புரத்தையெரித்தமாதேவா மூவுலகத்துளவுயிர்க்கு
மன்னையாய்விளங்குமாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௯௰)

சம்புவைப்பிடித்துக்குரகதஞ்செய்து தரணியில்நடத்தியேவந்து
வம்புசெய்வழுதிதனக்குமேகொடுத்த மகிமையையுலகிலாரறிவார்
கம்பமாமதஞ்சேர்கரியினைப்பயன்ற கர்த்தனேதழைவிரிகடுக்கோ
டும்புலிச்சடைசேர்நாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௯௧)

கல்லினும்வலியநெஞ்சகமுடைய கன்னியர்வலையில்வீழ்மாமற்
பல்லுயிர்க்குயிராய்நின்றபேரழகைப் பரிந்துபூசிக்குநாளுளதோ
தொல்லுலகதனிலுன்னடியடைந்த தூயவர்பிறப்பெனுங்கொடிய
அல்லலைபகற்றுநாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௯௨)

விண்டலத்தரசனசுரராற்கலங்கி வேயெனத்தவத்தொழில்புரியக்
கண்டுசேய்தன்னாற்சூர்சிறைதவிர்த்த கருணையைக்கனவிலுமறவேன்
பண்டுபோல்வலாரிதனக்கரசளித்துப் பார்மிசையனைத்தையுந்திருத்து
மண்டபேரொளியேநாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே, (௯௩)

புசபலம்படைத்தராவணன்கும்பன் புரிந்ததோர்தவத்தினைக்கண்டு
நிசமெனவந்துகடாட்சமும்றதனை நீணிலத்தோர்களோமதிப்பார்
முசலகமுதகுநெறுநெறுநெறெனமொய்த்திடும்பதத்தினையுடைய
அசைவிலாமுதலேநாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௯௪)

* சிங்கவன்மனையும்பிருகுவுஞ்சபிக்கத் தீயெழுப்புலியுருவாகி
பங்கயப்பாதந்தனைவந்துபணியப் பழவடிவானதைமறவேன்
சங்கரிமகிழ்நாசதாசிவப்பொருளே தாருகர்மகத்துதித்தெழுந்த
அங்கியையேந்துநாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௯௫)

விலைபடுவனிதைதனத்தையேவிரும்பி விரகவாரிதியில்விழாமம்
கலையதிபுனைபஞ்சாட்சரப்பொருளேகண்டுகண்களிக்குநாளுளதோ
சலசலோசனனும்வேதனுங்காணத் தானுவேஅடியவர்வினையை
அலைத்திடத்தவிர்க்குநாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௯௬)

---

* சிங்கவன்மன் - இரேவைாகியடுத்த - செயங்கலகோத்தரசன்

இந்திரன்குலிசாற்*கபாலவாபரண் ணிறந்திடமாய்கையின்தொடரச்
சிந்தைநைந்துனைவந்தேத்தியேபெற்ற சிறப்பினைப்புகலுதற்கெளிதோ
பந்தவெவ்வினையைகற்றியன்பருக்குப் பதந்தருகருணையங்கடலே
அந்தரர்புகழும்நாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௬௭)

கூர்பெறுவேல்போல்விழியினையுடைய கோதையர்மாய்கை செய்வலையி
ற்,சீர்கெடச்சிக்கு முன்னமேவந்துன் றிருப்பதக்கமலமேயருள்வாய்
பார்தனிலிருளிற்சுந்தரர்க்காகப் பரவைபானடந்ததூதுவனே
யார்நினையுணர்வார்நாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே. (௬௮)

பரிதியுமதியுமால்விதிகுலிசன் பதியுளார்முன்புடைசூழ
கருதியவிடைமேற்பூவையோடெழுந்து கழல்தனையெனக்கருள்புரிவாய்
தெரிந்துசெய்தவத்தாற்பிறப்பினையொழிக்குஞ் செல்வனேபணிவிடம்ர
ஞ்சை,அருந்துமாக்கடலேநாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே.

கடந்தருகனைபொற்பதத்தனேநீயும் நறைமலரணிந்தெழிற்கங்குற்
வேன்படர்ந்தகொந்தளத்தெம்பனையுமோருருவாம் பண்பினைச்சிறுவ
னுவறிதொடர்ந்த வெம்பவநோய்தனக்குருமருந்தே சோதியேகெங்கி
ல்வான்றடவடர்ந்தசெங்கோட்டுநாகமாமலைவா ழர்த்தநாரீசுரபரனே.

---

* கபாலவாபரணன்: திரிவக்திரராட்சதன் மனைவிக்கும் சுசிமுனிக்கும் உற்பவித்த அரக்கன்.

## நூற்பயன்.

மாசிலாவிடையோனர்த்தநாரீசர்மாலையிலன்புவைத்துருகிப்
பூசனை புரிந்துகற்பவர்கேட்போர்புன்மைகளனைத்தையும்நீக்கி
வாசவன்பதியைமகிழ்ச்சியோடாண்டுவளம்பெறுங்கனகமாங்கைலை
நேசனார்பாதகமலநீணிழலினிச்சயமாகவாழ்பவரே.

## அர்த்தநாரீசுரர்மாலை.

முற்றிற்று.